1991 சனவரி 25]

திரு. ஆலவாயல். வ. சுப்பையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகமாக பெருகிக் கொண்டு இருக்கிற இந்த நேரத்தில், இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், தமிழகத்தில் உள்ள ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒரு விசைத் தறிக் கூடம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதி ஆதாரத்தின் ஒதுக்கீட்டை ஆய்வு செய்து, இதுபோன்ற திட்டங்கள் செயல்பட முடியுமா என்பதை ஆராய்ந்து பார்க்கலாம்.

10-00 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியுடன் வினா நேரம் சற்று நீட்டிக்கப்பெறுகிறது.

நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள்

* 5286— திரு. மொஞ்சனூர் ப. இராமசாமி :

மாண்புமிகு கைத்தறி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் நூல்களுக்கு சாயமிடும் பணியைத் தனியார் நிறுவனங்களிடம் ஒப்படைப்பதற்கு அரசு தடை விதிக்குமா?

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் நூலினை சாயமிடும் பணியை மேற்கொள்ளும்பொழுது சொந்த சாயச்சாலை இருப்பின் அவற்றிலும், சொந்த சாயச்சாலை இல்லாத நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் நவீன சாயச் சாலையிலே சாயம் தோய்க்கும் அந்தப் பணி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களிலே செய்யப்பட வேண்டும் என்று இருக்கிறது. இவைகளில் எவையும் நெசவாளர் சங்கங்களில் சாயச்சாலை இல்லாத சூழ்நிலையில் ''மறுப்பின்மை சான்று'' பெற்ற பின்னால், அங்கீகரிக்கப்பட்ட சாயச் சாலைகளில் நெசவாளர் சங்கங்கள் அந்த சாயங்களை மேற்கொள்ள வேண்டுமென்று இலக்கு இப்போது நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மொஞ்சனூர் ப. இராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படித் தனியாரிடத்திலே இந்த சாயம் செய்கிற நூல்களைக் கொடுக்கிறபோது பல முறைகேடுகள் நடைபெறுகின்றன. அதுமட்டுமல்ல, காலதாமதம் ஏற்படுகிற காரணத்தால் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைப்பது அரிதாக இருக்கிறது. எனவே, பல கூட்டுறவுச் சங்கங்களை ஒன்றாக இணைத்து அவற்றின் மூலமாக, அந்தக் கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாகவே அந்த ஆலையை அமைக்கும் முயற்சியில் இந்த அரசு ஈடுபடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாயச் சாலை இல்லாத நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட தனியார் சாயச் சாலைகளிலே சாயம் வழங்கப்படுகிறது. அவற்றைப் பரிசோதனை செய்வதற்காக மாதந்தோறும் உதவி இயக்குநர் அவர்கள் அந்த சாயச் சாலைகளுக்கு சென்று, மாதிரிகளை எடுத்து சோதனை செய்கிறார். ஏதேனும் குறை ஏற்பட்டால் உடனுக்குடன் உதவி இயக்குநர் மூலமாக நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது. மேலும் தனியார் நெசவாளர் சங்கங்களில் சாயச் சாலை அமைக்கும் பணிகள் நிதி நிலைமையைப் பொறுத்து அந்தந்த சங்கங்களை ஏற்படுத்த முன் வருகின்றன. செய்ய இயலாத சூழ்நிலையில் கைத்தறி இயக்குநர் மூலமாகவும் அப்படிப்பட்ட சாயச் சாலை அமைப்பதற்கு அரசின் மூலமாகவும் ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆதிதிராவிடர்களுக்குத் திருமண மண்டபம்

* 6518—**திரு. அ. தங்கராசு :**

மாண்புமிகு ஆதி திராவிட நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருநெல்வேலி—கட்டபொம்மன் மாவட்டம், சிந்து பூந்துரை, மேலவீரராகவபுரம் ஆகிய கிராமங்களில் ஆதி திராவிடர்களுக்கென திருமண மண்டபம், சமுதாய நலக்கூடம் கட்டும் திட்டம் எந்நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. க. சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மேலவீரராகவபுரத்தில் சமுதாய நலக்கூடம் கட்டுவதற்கு ஒரு செயற்குறிப்பு தனியாக ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநரிடமிருந்து தற்போது வரப்பெற்று, அது அரசின் பரிசீலனையில் உள்ளது.